Praise the Lord:

நமக்கு சகாயராகவும் இரட்சகராகவும் இருக்கிற கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

*நமக்குள் வாசமாயிருக்கும் கிறிஸ்துவின் முலமாக பிதாவை நோக்கி நாம் ஜெபிக்குமுன். .*
*ஆவியாயும் ஜீவனாயும் உள்ள வார்த்தைகளை வாசித்து தியானிப்போம்.*

இந்த வார்த்தைகளை நாம் வாசிக்கிறோம், கேட்கிறோம், தியானிக்கிறோம், ஆராய்ச்சி செய்கிறோம். . ..
உலகத்தார்களில் சிலர்கூட இவையெல்லாவற்றையும் அல்லது ஒருசிலவற்றை செய்கிறார்கள்.
ஆனால் நாம் இன்னொரு முக்கியமான காரியத்தையும் சேர்த்து செய்கிறோம்.
இந்த வார்த்தைக்குள் வாழ்கிறோம்.

வாழ்கிறோம் என்று சொல்வதைவிட கிறிஸ்துவின் கிருபையோடு,
வாழ்வதற்கு பிரயாசப்படுகிறோம் என்று சொல்லத்தான் நான் விருப்பப்படுகிறேன். ஆமென்.

*இதை நீங்கள் ஒத்துக் கொள்கிறீர்களா? . . . . . . ஆமென்.*
*இப்படி நாம் சொல்வது நமது வாயிலிருந்து வரும் வெறும் வார்த்தைகளாக இல்லாமல் இருதயத்திலும் அதே சிந்தனை இருக்குமானால், கர்த்தர் மகிழ்ந்து நம்மோடு இருந்து நம்மை பெலப்படுத்துவதை நம்முடைய விசுவாசக் கண்களாலே பார்க்கலாம். ஆமென்.*

நான் இந்தியாவிலே வேலை செய்த companyல், நான் பல்வேறு department buildingக்கு அடிக்கடி செல்லவேண்டியிருக்கும். அப்படி நான் நடந்து செல்லும்போது எனக்கு முன்னால் எனக்கு தெரிந்த friend வரும்போது அவர் எனக்கு Good morning சொல்லிக்கொண்டே செல்வார். நான் அவரை நோக்கிப் பார்ப்பதுபோலச் சென்றாலும், வேறு சிந்தனைகளில் செல்லும்போது அவர் Good morning சொல்வதை கேட்க, கவனிக்க தவறிவிடுவேன். நான் அவரை பார்த்தும் பார்க்காதது போலவே நடந்து செல்வதாகவே அவருக்குத் தோன்றும்.. அந்த நண்பர் அன்று மாலையில் எனது Roommateடம் வந்து, நான் Good morning சொல்லியும் இவன் சொல்லாமல் செல்கிறான். என்று complaint செய்வார். அதற்கு என்னைப்புரிந்த எனது roommate அவரிடம். .. நீ அப்படி நினைக்க வேண்டாம். அவன் அப்படித்தான் வேறு சில சிந்னைகளில் செல்லும்போது அவன் பார்த்தாலும் பார்க்காததுபோல்தான். அதைதவறாக எடுத்துக் கொள்ளாதே என சொல்வார். அதன்பிறகு என்னிடம் வந்து நீ ஏன் இப்படி இருக்கிறாய்? கவனமாக இரு இல்லையென்றால் உன்னை பைத்தியம் என்று முடிவு செய்துவிடுவார்கள் என்று advise கொடுப்பார்.. . ..

இப்படி ஒன்றல்ல, பல நண்பர்கள். பிறகு அவர்களும் என்னை புரிந்துகொள்வார்கள்.. . .

கண் பார்வை எங்கேயோ அங்கே கவனமும் இருக்கவேண்டும்.

ஆண்டவரை நோக்கி நாம் ஜெபிக்கும்பொழுது நமது இருதயமும் ஆண்டவரை நோக்க வேண்டும்.
நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன். உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள் என்று எரேமியாவில் வேதம் சொல்கிறது.
நமது பெலவீனங்கள் நமக்கு தடையாக இருக்கலாம். சகாயரான நமது தேவனுடைய உதவியினாலே நமது பெலவீனத்தை மேற்கொள்வோமானால் நமக்கு அவர் கொடுத்த இரட்சிப்பை நாம் காத்துக்கொள்ள முடியும். ஆமென்.

வாசியுங்கள் **சங்கீதம்/Psalm 27:9** (பக்கம்: 685)

## Let us Pray

உமது முகத்தை எனக்கு மறையாதேயும்; நீர் கோபத்துடன் உமது அடியேனை விலக்கிப்போடாதேயும்; நீரே எனக்குச் சகாயர்;
Do not hide your face from me, do not turn your servant away in anger; you have been my helper. (NIV)

*இந்த அதிகாரத்தை நீங்கள் முழுவதுமாக வாசித்து தியானியுங்கள்.*

*உமது முகத்தை எனக்கு மறையாதேயும். . . .*
உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. (ஏசாயா/Isaiah 59:2)
என்று ஏசாயா அதிகாரத்திலே சொல்லப்பட்டதை மேலும் வாசித்துப் பாருங்கள்.
*நீர் கோபத்துடன் உமது அடியேனை விலக்கிப்போடாதேயும்;. . ..*
கர்த்தரின் வார்த்தைகளை கேட்டு அதன்படி நடக்காததால், பழைய ஏற்பாட்டிலே கர்த்தர் எப்படியாக மக்கள்மீது அவருடைய கோபம் ஏற்படுகிறது என்பதை நீங்கள் பழைய ஏற்பாட்டை வாசிக்கும்போது உணரலாம்.
நான் இதுவரை வேதப்படிப்பில் படித்த வசனங்களையும் நான் சொந்த வேதவாசிப்பிலே எனக்கு உணர்த்தப்பட்ட வசனங்களையும் . . . . **நான் மீண்டும் மீண்டும் தியானிக்க தியானிக்க, நான் கர்த்தருடைய வார்த்தையை என் வாழ்க்கையில் கடைபிடிக்க முடியாமல் போகும் சூழ்நிலை வரும்போது, என் பெலவீனத்திலே கலங்கி அவரிடம். . . ஆண்டவரே, நீர்**
உமது முகத்தை எனக்கு மறையாதேயும்; நீர் கோபத்துடன் உமது அடியேனை விலக்கிப்போடாதேயும்; நீரே எனக்குச் சகாயர்; **என்று தேவனை நோக்கி ஜெபிக்கும்பொழுது, அவர் எனக்கு பெலத்தை கொடுத்து உற்சாகப்படுத்துவார்.**

> **சகாயர். . .உதவி செய்பவர், ஒத்தாசை செய்பவர், உபகாரம் செய்பவர் நமது பெலவீனத்தைப் பார்த்து இரக்கப்பட்டு நமக்கு உதவி செய்வார். அவர் இரக்கத்தில் ஐசுவரியம் உள்ள தேவன்.**

**நம் இருதயத்திலே உணர்ந்து வாயினாலே அறிக்கை செய்து ஜெபிக்கும்பொழுது அவர் அதைக் கேட்கிறவராக இருக்கிறார்.**

> **நாம் இருதயத்திலே உணராமல் அவரை நோக்கி நாம் ஜெபிக்கும்போது, அவர் நம்மைப் பார்க்கிறாரா அல்லது கோபத்திலே அவர் நமக்கு முகத்தை மறைக்கிறாரா என்று கூட நமக்குத் தெரியாமல் இருக்கலாமே. . . . சிந்தித்துப் பாருங்கள்.**

**அவர் சகாயர் என்பதற்காக, நாம் பெலவீனத்திலே அப்படியே தொடர்ந்து வாழலாமா? NO.**
**இந்த வசனம் அடுத்த பகுதியைப் பாருங்கள்.**
என் இரட்சிப்பின் தேவனே, என்னை நெகிழவிடாமலும் என்னைக் கைவிடாமலும் இரும்.
Do not reject me or forsake me, O God my Savior. (NIV)
….Don't leave me now; don't abandon me,… (NLT) ….leave me not, neither forsake me,…(KJV)
…Cast me not off, neither forsake me,…(AMP)
**நம்மேல் பிரியம் வைத்து, கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நமது பாவங்களை நீக்கி, நமக்கு இரட்சிப்பை கொடுத்தவர் தேவன். அதை காத்துக் கொள்ள வேண்டியது நமது பொறுப்பு.**
**முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். மத்தேயு அதிகாரத்திலேயும் (மத். 24: 13)**
அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் **இரட்சிப்பு** நிறைவேறப் பிரயாசப்படுங்கள். (பிலி.2:12)
**என்று பிலிப்பியரிலும் வேதம் சொல்கிறது.**
என்னை நெகிழவிடாமலும் **என்ற வார்த்தையை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்.**
….leave me not, neither forsake me,…(KJV)
*(leave : **விட்டுவிடு, பிடியை விடு** forsake, abandon: **கைவிடு, நிராகரி.**)*
***நெகிழவிடாமல்:*** *not become loose, **இறுக்கம் தளர்தல்.** .*
என்னை நெகிழவிடாமலும் . . . .
**நம்மை கையைப்பிடித்து வழிநடத்துகிற கர்த்தர் நாம் அவரோடும் அவருடைய வார்த்தையிலும் உறுதியான ஐக்கியத்திலே இருக்கிறோமா என்று அவர் நம்மை கொஞ்சம் நெகிழவிட்டுப் பார்த்தால் . . . . . . . . .என்று சிந்தித்துப் பாருங்கள்.**

**தேவன் ஆபிரகாமை கொஞ்சம் நெகிழவிட்டபோது, ஆபிரகாம் தேவனுக்குப் பயப்படுகிறவராகவும் கீழ்ப்படிகிறவராகவும் விசுவாசத்தில் உறுதியுள்ளவராகவும் இருந்ததால், ஆபிரகாம் தேவனோடு ஒட்டிக்கொண்டு வெற்றி பெற்றார்.**

> **யோபுவுக்கு ஒரு நெகிழ்வை தேவன் அனுமதித்தபோது யோபுவும் தன்னுடைய தேவன் யார் என்பதை அறிந்து அந்த விசுவாத்திலே உறுதியாக இருந்ததால் வெற்றிபெற்றார்.**

**கர்த்தருடைய துணையோடு எப்பொழுதும் நாம் இருக்கும்போது,**

நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. **என்ற வாக்குத்தத்தம் நம் ஒவ்வொருவருக்கும் உரித்தானது. ஆமென்.** (யோசுவா 1:5, உபா. 31:6, எபி. 13:5)

I will never leave you nor forsake you. (NIV) I will not fail thee, nor forsake thee.(KJV)
I will not leave you nor forsake you. (NKJV)

**இந்த வாக்குத்தத்ததை நாம் உரிமையாக்கிக்கொள்ள, நாம் கர்த்தருடைய கட்டளைகளையெல்லாம் செய்ய கவனமாயிருக்கும்படி அவர் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்.**

**நம்மைவிட்டு விலகுவதில்லை என்ற கர்த்தரைப் பற்றிக்கொண்டு, அவரைவிட்டு நாம் விலகாமல் அவருக்குள் வாழ்ந்தோமானால், அவர் நம்மை விலக்கிப்போடமாட்டார். ஆமென்.**

அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் நமக்குக் கிடைத்த **இரட்சிப்பு** நிறைவேறப் நாம் **பிரயாசப்படும்போது**, **இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன் நமக்கு** தொடர்ந்து **ஒத்தாசை செய்வார்.**

உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே **ஒருமனப்பட்**டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். **(மத் 18:19)**

**என்ற வேதவசனத்தை சிந்தித்துப் பாருங்கள்.**

**நமக்கும் நமது இருதயத்துக்குமே பெரிய பிரச்னை இருந்தால், இருவர் ஒருமனப்படுவது எப்படி ?. . . முடியாததல்ல. நமக்குள் இருக்கும் தேவனாலே கூடும்.**

**பழைய ஏற்பாட்டிலே,. . வார்த்தைகளை கவனமாக கேட்டு அதன்படியெல்லாம் நடக்க சொன்னார்.**

**புதிய ஏற்பாட்டிலே. . .வார்த்தைகளோடே நாம் வாழ்கிறோம். நம்மில் வார்த்தை ஜீவிக்கிறது.**

**வார்த்தைக்கும் நமக்கும் உள்ள ஐக்கியம் பூரணப்பட பூரணப்பட . . .. .**
**ஆபிரகாம், யோபு. . போன்றோர்களிடம் இருந்த விசுவாத்தின் உறுதியைவிட**
**அதிக உறுதி நமக்கிருக்கவேண்டும். . . சிந்தியுங்கள். . ..**

***சத்தியமும் கிருபையும் நிறைந்தவராக நம்மிலே வாசம் செய்கிறார். ஆமென்.***

**எபிரெயர்/Hebrews 12:1 (பக்கம்: 309)**

. . . .மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;

**நமது பெலவீனங்களோ, மற்ற மனிதர்களின் பெலவீனங்களோ, நம்மை ஒருபோதும் ஆட்கொள்ளாமல் இருக்க நமக்கு இந்த ஜீவனுள்ள வசனங்கள் வழிகாட்டுகின்றன.**

**நாம் இந்த வார்த்தையிலும், இந்த வார்த்தைகள் நம்மிலும் ஜீவிக்க, நமது இருதயத்திலே முழுவிருப்பத்தோடு ஒன்றுபட்டு கர்த்தரை நோக்கி பார்த்து விண்ணப்பம் செய்யும்போது கர்த்தர் பெரிய காரியத்தை நமக்குள்ளே செய்வார், நம் மத்தியிலே செய்வார், இந்த ஆலயத்தை சுற்றிலும் உள்ள மக்களின் மத்தியிலேயும் செய்வார். . .**

**அந்த விசுவாசத்தோடும் பிரயாசத்தோடும் நாம் அனைவரும் நம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து எழுந்திருப்போமாக.**

**விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலே ஆகும்.**

## Let us Pray

***யோசனையில் பெரியவரே செயலிலே வல்லவரே***
***எங்கள் யோசனைகள் சிறுகவும் உமது யோசனைகள் எங்களில் பெருகவும் வேண்டும் ஆண்டவரே.***

*சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும்,*
*கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி,*
*பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.*

அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார்.

கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது

அவருடைய உடன்படிக்கையைக்கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள் மேலேயே உள்ளது. . ..